இனிமையான குழந்தைகளே! நமது தந்தை ஆசிரியர் மற்றும் சத்குரு மூவருமே இணைந்து இருக்கிறார்கள் என்பதை நினைவு செய்தால் கூட அளவு கடந்த குஷி ஏற்படும், அவரது ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருப்பீர்கள்.

கேள்வி: பிராமணர்களின் முதல் இலட்சணம் எது? எந்த விஷயத்தில் பிராமணர்கள் தேர்ச்சி பெற்றவர்கள் ஆக வேண்டும்?

பதில்: படிப்பது மற்றும் படிப்பிப்பது இது தான் பிராமணர்களின் முதல் இலட்சணம் ஆகும். எவரொருவர் மீதும் ஞானத்தின் சாயம் ஏற்றுவதில் மிக மிக தேர்ச்சி பெற்றவர் ஆகுங்கள். யாராவது அவமதித்தாலும் வசை சொற்கள் கூறினாலும் கூட நீங்கள் முயற்சி செய்து பாருங்கள் அப்பொழுது அவர்கள் மீது அவசியம் பிரபாவம் ஏற்படும். பாத்திரமறிந்து தானம் கொடுக்க வேண்டும். அழியாத செல்வம் வீணாகிப் போகக்கூடாது. எனவே மிகுந்த எச்சரிக்கை தேவை. பைசா கூட எவரொருவருக்கும் ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

பாடல்: யார் தலைவனுடன் இருக்கிறார்களோ.....

ஓம்சாந்தி. இறை மாணவர்கள் இந்த பாடலைக் கேட்டீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் தான் காட்லி ஸ்டூடண்ட் ஆவீர்கள். எல்லா பள்ளிக்கூடங்களிலும் இறை மாணவர்கள் இருப்பார்கள் என்பதல்ல. அங்கோ மனிதர்கள் படிப்பிக்கிறார்கள். சந்நியாசிகள் கூட சாஸ்திரங்களை கூறு கிறார்கள். உண்மையில் ஞானம் ஒன்றும் மழை என்று கூறப்படுவதில்லை. மழையோ தண்ணீரினுடையது ஆகும். ஆனால் இந்த மகிமை பாடப்பட்டுள்ளது. ஏனெனில் பரமபிதா பரமாத்மாவிற்கு ஞானக்கடல் என்றும் கூறப்பட்டுள்ளது. தந்தை கூறுகிறார் - என்னை ஞானக்கடல், நாலேஜ்ஃபுல் என்றும் கூறுகிறார்கள். ஞானத்தை மழை, தண்ணீர் அல்லது அமிர்தம் என்று கூறுவதில்லை. எப்படி மானசரோவரில் குளம் உள்ளது, அமிர்தசரஸில் கூட ஒரு குளம் உள்ளது. அதை அந்த மக்கள் அமிர்தம் என்று கருதுகிறார்கள். இதை தந்தை வந்து புரிய வைக்கிறார். படிப்பை அமிர்தம் அல்லது மழை என்று கூறமாட்டார்கள், அமிர்தம் என புரிந்துள்ளனர். இதனால் துக்கம் விலகி விடும் என்று நினைக் கிறார்கள். உண்மையில் இந்த ஞானத்தினால் உங்களுடைய எல்லா துக்கமும் 21 பிறவிகளுக்கு நீங்கி விடுகிறது. யார் தலைவருடன் இருக்கிறார்களோ அவர்களுக்காக மழை உள்ளது. இங்கு இந்த தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குரு மூவருமே இணைந்து உள்ளார்கள். இந்த ஒரு விஷயத்தைக் கூட குழந்தைகள் நினைவில் வைத்தார்கள் என்றால் அளவு கடந்த குஷி ஏற்பட்டு விடும். ஆனால் மாயை அடிக்கடி மறக்க செய்து விடுகிறது. இங்கு குழந்தைகளாகிய நீங்கள் ஸ்ரீமத்படி நடக்கிறீர்கள், ஸ்ரீமத் மூலம் நீங்கள் சிரேஷ்டமானவர் ஆகிறீர்கள். பகவான் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை ஆவார். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் படிப்பினால் தான் உயர்ந்ததிலும் உயர்ந்தவராக ஆக முடியும். இப்பொழுது தலைவனுக்கு முன்னால் அமர்ந்துள்ள அனைவரும் மாணவர்கள் ஆவார்கள். இங்கு அமர்ந்திருப்பார்கள். படித்த பிறகு தங்கள் வீடு செல்ல வேண்டும். நாளுக்கு நாள் மாணவர்களோ நிறைய பேர் ஆகி விடுவார்கள். எல்லோரையும் ஒரே வீட்டில் ஒன்றாக இருக்க வைக்க வேண்டும் என்றால் எவ்வளவு பெரிய வீடு தேவை. முழு அபுவையே வீடாக அமைத்தாலும் கூட போதுமானதாக

ஆகாது. எத்தனை சென்டர்கள் உள்ளன. இப்பொழுதோ கொஞ்சம் தான் இருக்கிறது. இதைவிடவும் ஆயிரம் மடங்கு அதிகமாக ஆகும். ஒரு ஆயிரம், இரண்டாயிரம், ஐந்தாயிரம், ஏழாயிரம் கூட சென்டர்கள் ஆகக் கூடும். பிறகு வீட்டுக்கு வீடு இந்த ஞானக் கங்கைகள் ஞான மழை பொழிவார்கள். அவ்வளவு ஏராளமான குழந்தைகள் ஆகி விடுவார்கள், ஆங்காங்கே பாருங்கள், சென்டர்கள் திறந்து கொண்டே இருக்கிறார்கள். ஒரு சிலர் கீதாபாடசாலை என்ற பெயர் வைக்கிறார்கள். ஒரு சிலர் பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் என்ற பெயர் வைக்கிறார்கள், பிரம்மாகுமாரி என்ற பெயர் வைக்கிறார்கள். உண்மையில் பிரம்மாகுமாரி என்ற பெயர் வைப்பதற்கு பயப்படக்கூடாது. ஒரு சிலர் பி.கே என்ற பெயரை பார்த்து குழப்பம் விளைவிக்க கூடாதே என்று பயப்படுகிறார்கள். எனவே கீதாபாடசலை என்ற பெயரை வைத்து விடுகிறார்கள். கீதாபாடசாலை என்ற வார்த்தையோ சாதாரணமானது. ஏதாவது விக்னம் வந்து விடக் கூடாதே என்று நினைத்து பி.கே என்ற பெயரை மாற்றி வேறு ரூபம் கொடுத்து விடுகிறார்கள். உண்மையிலேயே விஷயம் ஒன்று தான். உள்ளுக்குள் நுழைந்தவுடன் படங்கள் ஆகியவற்றை பார்த்து இதுவோ அதே பி.கே. ஆவார்கள் என்று சட்டென்று புரிந்து கொள்வார்கள். எனவே பெயர் மாற்றுவதற்கான அவசியம் ஒன்றும் இல்லை. இதன் மூலமாகவோ உண்மையில் இவர்கள் பிரம்மாவின் புத்திரர்கள் பிரம்மாகுமார் குமாரிகள் ஆவார்கள் என்பது நல்ல முறையில் நிரூபணமாகிறது. இதுவோ நல்லது தான் அல்லவா! உண்மையில் நீங்கள் கூட பிரம்மாகுமார் குமாரிகள் ஆவீர்கள் என்று நீங்கள் எல்லோரிடமும் கூறலாம். பிரஜாபிதா பிரம்மாவை நீங்களும் அறிந்துள்ளீர்கள். அவர் மனித சிருஷ்டியின் படைப்புக் கர்த்தா ஆவார். நிராகார் பரமபிதா பரமாத்மா ஆத்மாக்களின் படைப்புக் கர்த்தா ஒன்றும் அல்ல. அவரோ ஆத்மாக்களின் தந்தை இவருக்குள் வருகிறார் வந்து பிரஜைகளை படைப்பதற்காக பிரம்மாவை சுவீகாரம் செய்கிறார். பிரம்மா மூலமாக பிராமண குலத்தைப் படைக்க வேண்டியுள்ளது. இதுவோ புரிய வைப்பது எப்பொழுதுமே சுலபமாக இருக்கும். ஆனால் பயப்படுகிறார்கள். பி.கே.யிடம் போகாதீர்கள் என்று கூறுவார்கள். கீதா பாடசாலைக்கு வேண்டுமானால் செல்லுங்கள் வீட்டுக்கு வீடு ஞான கங்கை என்பதன் பொருள் கூட மனிதர்கள் புரிந்து கொள்வதில்லை.

பக்தி மார்க்கத்தில் நாரதர் முக்கியமானவர் என்று கருதப்படுகிறது. ஜாலரா வாசிக்கும் பக்தராக இருந்தார். ஆனால் படங்களில் காட்டுவது போல அப்பேர்ப்பட்ட ரூபம் உடையவராக இருந்தார் என்பதல்ல. உண்மையில் குரங்கு போன்று நீங்கள் அனைவரும் இருந்தீர்கள். தோற்றம் மனிதனுடையது. குணம் குரங்கினுடையதாக இருந்தது. பார்க்கப்போனால் எல்லோருமே நாரதர்கள் தான். எல்லோரும் பக்தர்கள் ஆவார்கள் அல்லவா? தெய்வீக குணங்கள் உடைய மனிதர்களாக நாம் ஆகாதவரை நாம் இலட்சுமியை வரன் முடிக்க முடியாது என்று புரிந்து கொள்ளலாம். எல்லா ஆண்கள் மற்றும் பெண் பக்தர்கள் நாரதர் ஆவார்கள். உனது முகத்தையே பார், நீயோ குரங்கு ஆவாய், ஏனெனில் உனக்குள் 5 விகாரங்கள் உள்ளன. எனவே இலட்சுமியை வரன் முடிக்க முடியாது என்று கூறப்படுகிறது. எல்லாமே இங்கு இருக்கும் விஷயங்கள் ஆகும். எல்லாருமே துச்சாதனன் அல்லது துரியோதனர்கள் ஆவார்கள் என்று பாபா புரிய வைக்கின்றார். திரௌபதிகளை மானபங்கப் படுத்தப்படுகிறார்கள். எனவே தாய்மார்கள் எங்களை மானபங்கப்படுத்துவதிலிருந்து காப்பாற்றுங்கள்,

பாதுகாப்பு அளியுங்கள், கிரிதரா! என் மானத்தைக் காப்பாற்று என்று கன்னிகைகள் கூறுகிறார்கள். பெயரோ நிறைய வைத்து விட்டுள்ளார்கள். மனிதர்களின் புத்தியோகம் கிருஷ்ணர் பக்கம் சென்று விடுகிறது. ஆனால் தேகதாரி கிருஷ்ணரை நினைவு செய்வதால் விகர்மங்கள் விநாசம் ஆக முடியாது. சாட்சாத்காரம் ஆக வேண்டும் என்று விரும்புகிறார்கள், சரி சாட்சாத்காரமே ஆகி விட்டாலும் கூட மனிதனிலிருந்து தேவதை ஆவதற்கான ஞானம் கிடைக்க முடியாது. பிராமணராகி ஞானத்தை புரிந்து கொண்டால் மட்டுமே தேவதை ஆக முடியும். பிராமணர் ஆவதால் பக்தி விடுபட்டு விடுகிறது. முதலில் ஒரு வாரம் இதில் ஈடுபடும்பொழுது நாம் மனிதரை

கோவிலில் பூஜிக்கத்தக்கவராக ஆக்க முடியும். ஆனால் நேரமோ பிடிக்கிறது. நீங்கள் உண்மையில் இப்பொழுது தந்தையுடன் கூடவே இருக்கிறீர்கள். பாபாவிடம் வருகிறீர்கள் பிறகு போகும் பொழுது எவ்வளவு இதயத்திற்குள் துக்கம் ஏற்படுகிறது. ஆனால் எல்லோருமே கூட இருக்க முடியாது. அவ்வாறு ஆக முடியாது. எங்கெங்கிருந்தோ அவரவர்கள் ஓடி வருகிறார்கள். இந்த வழக்கம் இங்கு தான் உள்ளது. சாது சந்நியாசிகள் ஆகியோரிடமோ ஏராளமானோர் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். யாரும் யாருக்கும் தடை விதிப்பதில்லை. இங்கோ தூய்மையாக ஆகும் விஷயம் வருகிறது. எனவே தடுக்கிறார்கள். சந்நியாசிகளிலோ ஆண்கள் மட்டும் வீடு வாசல் விட்டு சென்று விடுகிறார்கள். இங்கோ குமாரிகள், தாய்மார்கள் எல்லோரும் உள்ளனர். கன்னிகைகளுக்கு திருமணம் செய்யவில்லை என்றால் நோய்வாய்ப்பட்டு விடுவீர்கள் என்று தாய், தந்தை, டாக்டர் ஆகியோர் கூறுகிறார்கள். அடடே சந்நியாசிகள் எத்தனை பேர் ஆகிறார்கள். மிகவும் சிறிய சிறிய வயதில் பிரம்மசாரிகள் அங்கு இருக் கிறார்கள் பின் அந்த பிரம்மசாரிகளோ ஒருபொழுதும் நோய்வாய்ப்படுவதில்லை. இங்கு ஏன் நோய்வாய்ப் படுவார்கள்? திருமணம் செய்து கொள்ளாமலே ஏராளமானோர் இருக்கிறார்கள் என்று அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். சந்நியாசிகள் மீது கூட யாரும் வழக்கு தொடர முடியாது. ஒருபொழுதும் எந்த ஒரு பெண்ணும் அவரிடம் வீட்டு செலவுக்கு பணம் கேட்பதில்லை அவர்களோ ஓடி விடுகிறார்கள். அந்த பெண் செலவிற்கு எங்கிருந்து கொண்டு வருவாள்? பிறகு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவர்களை பார்த்து கொள் கிறார்கள். ஏழைகள் அதிகமாக ஓடுகிறார்கள். துக்கம் அடைகிறார்கள் அதனால் பின் வைராக்கியம் வருகிறது. நீங்கள் துக்கத்துடன் தான் இருந்தீர்கள். ஆனால் அது வைராக்கியத்தின் விஷயம் அல்ல. உங்களுக்கோ

முதலில் உள்ளங்கையில் சொர்க்கம் காண்பிக்கப்படுகிறது. தூய்மை ஆகாமல் எப்படி வைகுண்டம் செல்ல முடியும்? தைரியமுடையவர் ஆக வேண்டும். எனவே தான் சிவசக்தி சேனை என்ற பெயர் உள்ளது. சிவபாபா வுடன் யோகம் கொள்வதால் சக்தி கிடைக்கிறது. ஞானத்தின் தாரணை ஆன பிறகு சமர்ப்பணம் ஆக வேண்டும். ஞானத்தின் தாரணை ஆகவில்லை, நஷ்டமோகா ஆகவில்லை என்றால் பின் மாயை வந்து துன்புறுத்தும். திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றும் பின் எல்லா பிரம்மா குமாரிகளின் பெயர் கெட்டு போய் விடுகிறது. முதலில் நஷ்டமோகா ஆக வேண்டியுள்ளது. நீங்கள் இத்தனை பேர் பட்டியில் இருந்தீர்கள் பிறகும் கூட எவ்வளவு பேர் நஷ்டமோகா ஆகவில்லை. நினைவு வந்து கொண்டே இருந்தது. இங்கிருந்து போனார்கள்,

நண்பர்கள் உறவினர்களின் முகங்களை பார்த்தார்களோ இல்லையோ மோகம் உடையவராகி உட்கார்ந்து விட்டார்கள் மோகம் சூழ்ந்து கொண்டு விட்டது. இதுவும் நாடகத்தின் செயல். இப்பொழுதும் தந்தை கூறுகிறார் - முதலில் நஷ்டமோகா ஆகுங்கள். ஒரு அன்பிற்குரிய ஒரே ஒரு தந்தையினுடையவர் ஆகி விடுங்கள் என்ன ஆனாலும் சரி. நாங்களோ தந்தையினுடைய சேவையில் இருப்போம் என்று கூறப்படுகிறது அல்லவா - ஏறினால் ஒரேயடியாக வைகுண்டத்தின் சுவையை சுவைப்பார்கள் விழுந்தார்கள் என்றால் சுக்குநூறாக ஆகிவிடுவார்கள். அப்படி விட்டுவிட்டு வந்து விடுவது பிறகு மோகம் தொல்லைப் படுத்துவது அப்படியும் இருக்கக் கூடாது. இதுபோல நிறைய சந்நியாசிகள் போய் பின் திரும்பி வருகிறார்கள். சந்நியாசி வீட்டிற்கு திரும்பி வந்தால் பின் அக்கம் பக்கத்தார் அவமரியாதை செய்கிறார்கள். இவர் காமத்திற்காக ஓடி வந்துள்ளார் என்று நினைக்கிறார்கள். இங்கு கூட இவர் முழுமையாக நஷ்டமோகா ஆகவில்லை. விகாரங்கள் சூழ்ந்து கொண்டு விட்டன என்று புரியப்படுகிறது. பாபாவிடம் ஒன்றும் சாப்பாட்டிற்கு கஷ்டம் எல்லாம் கிடையாது. ஆரம்பம் முதல் கொண்டு எவ்வளவு பராமரிப்பு செய்து கொண்டே வந்துள்ளார். ஏழை, பணக்காரர் ஒரே சமம் தான். மம்மா பாபா கூட அனைவருக்கும் கற்பிப்பதற்காக பாத்திரங்கள் கழுவுவார்கள். வீடு பெருக்கி சுத்தம் செய்வார்கள். தேக அபிமானத்தை துண்டிப்பதற்காக செய்யப்படுகிறது. சந்நியாசிகள் கூட அவ்வாறு செய்விக்கிறார்கள். யாராவது பெரிய மனிதராக இருந்தால் தேக அபிமானத்தை துண்டிப்பதற்காக அவரை விறகு ஆகியவை வெட்டுமாறு செய்வார்கள். இங்கோ மிக உயர்ந்த சொத்து கிடைக்கிறது. ஒரு வினாடியில் 21 பிறவிகளுக்கான அரசாட்சி. சந்நியாசிகளிடம் எதுவும் பிராப்தி இல்லை. மற்றபடி தூய்மையாக இருக்கிறார்கள். அதனால் தூய்மை இல்லாதவர்கள் தலை வணங்குகிறார்கள். இதுவோ இராஜயோகம் ஆகும். உலகிற்கு எஜமானர் ஆகிறீர்கள்.

விகாரத்தில் செல்லக் கூடாது. மீரா கூட பவித்திரமாக இருக்க விரும்பினார் அல்லவா? அவரோ பக்தி மார்க்கத்தில் இருந்தார். கிருஷ்ணரின் சாட்சாத்காரம் செய்து கொண்டிருந்தார். அவரது உள்ளம் கிருஷ்ணர் மீது ஈடுபாடு கொண்டது. பின் அவர் எப்படி விகாரத்தில் செல்வார்? அது கூட ஒரு பிறவிக்கு வேண்டுமானால் இருக்கலாம். மீரா அடுத்த பிறவியில் கூட பக்தி மார்க்கத்தில் சென்றிருக்கக் கூடும். அவர் பக்தி மார்க்கத்தில் சென்றார் என்று இவ்வாறும் கூறலாம். ஏனெனில் கடைசியில் மதி (புத்தி) எப்படியோ அப்படியே கதி ஆகிறது. கிருஷ்ணர் மீது மனம் அன்பு கொண்டிருந்ததால் மீண்டும் பக்தையாகவே ஆகி இருப்பார். ஆனால் பக்தி மார்க்கத்தில் ஒன்றும் கிடைக்கவே இல்லையே, ஞான மார்க்கத்திலோ 21 பிறவிகளுக்கு ஆஸ்தி கிடைக்கிறது. பக்தி கூட முதலில் சிவனுக்கு செய்கிறார்கள் பிறகு தேவதைகளுக்கு செய்கிறார்கள். இப்பொழுதோ பாருங்கள் எலி, பூனை ஆகிய எல்லாவற்றிற்குமே பக்தி செய்ய முற்பட்டுள்ளார்கள். கிருஷ்ணரை விட்டு விட்டு ஹனுமார், கணேசர் ஆகியோருக்கு பக்தி செய்ய முற்பட்டு விடுகிறார்கள். சத்யுக திரேதாவில் கூட கலைகள் குறைந்து கொண்டே போகின்றன மற்றும் பக்தியில் கூட கலைகள் குறைந்து கொண்டே போகின்றன. இப்பொழுதோ எதற்குமே உதவாதவர்கள் ஆகி விட்டீர்கள். அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்படும்பொழுது தந்தை வந்து புரிய வைக்கின்றார். அரைக் கல்பம் முன்னேறி செல்கிறீர்கள். பிறகு அரைக் கல்பத்திற்கு பின் இறங்குவது ஆரம்பமாகிறது. விழவே வேண்டி இருக்கிறது

என்றால் பின் ஞானம் பெற்று என்ன செய்வது என்று மனிதர்கள் கருதுகிறார்கள் ஆனால் ஈஸ்வரிய ஞானம் இன்றி மனிதனோ எதற்குமே பிரயோஜனமில்லை. நாம், நீங்கள் எல்லோரும் என்னவாக இருந்தீர்கள்? ஒன்றுமே இல்லை. ஞானம் அவசியம் வேண்டும் சரீர நிர்வாகத்திற்காக படிக்கிறார்கள் அல்லவா? கன்னிகைகள் கூட தற்சமயம் சரீர நிர்வாகத்திற்காக படிக்க வேண்டியுள்ளது. இதற்கு முன்பு இந்த நியமம் இருக்கவில்லை. கன்னிகைகள் வீட்டை பராமரித்து கொண்டிருந்தார்கள். பையன்கள் வேலைக்காக படித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது எல்லையில்லாத தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார். எல்லோருமே இங்கே அமர்ந்து விட்டால் பின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு எப்படி ஞானம் கொடுப்பீர்கள்? எனவே போக வேண்டும். படிக்க வேண்டும் மற்றும் படிப்பிக்க வேண்டும் ஒரு சிலரோ முற்றிலும் படிப்பதே இல்லை. இவர்கள் நமது பிராமண குலத்தினுடையவர்கள் அல்ல என்று புரிந்து கொள்ள வேண்டும். (சாயம் போடுவதற்கான) நம்மைப் போல மாற்றுவதற்கான முயற்சி அவசியம் செய்ய வேண்டும். இதில் பயப்படுவதற்கான விஷயம் இல்லை. முயற்சி செய்வதால் பின் யாராவது ஒருவருக்கு (சாயம்) அம்பு பாய்ந்து விடும். யாராவது அவமதித்தாலும் சரி திட்டினாலும் சரி நீங்கள் புருஷார்த்தம் செய்து பாருங்கள் யாராவது ஒருவர் மீது அவசியம் பாதிப்பு ஏற்படும். தேள் சென்று கொண்டிருக்கும் பொழுது மென்மையான பொருளைப் பார்த்து அங்கு கொட்டி விடுகிறது. சோதித்துப் பார்க்கிறது. இங்கு கூட குழந்தைகள் மிகவும் தேர்ச்சி உடையவர் ஆக வேண்டும் அழிவற்ற செல்வத்தை யாருக்குமே வீணாகக் கொடுக்கக் கூடாது. பாத்திரமறிந்து தானம் கொடுக்க வேண்டும். யாருக்காவது தானம் கொடுத்தீர்கள் மற்றும் அதன்மூலம் யாராவது ஏதாவது விகர்மம் செய்து விட்டார்கள் என்றால் அதனுடைய பாவம் அந்த தானம் கொடுத்துவர் மீது வந்து விடும். இங்கு மிகவும் எச்சரிக்கை தேவை. பைசாவோ மிகவும் ஜாக்கிரதையுடன் கேட்டு ஒருவருக்கு கொடுக்க வேண்டும். இங்கோ என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்களோ அவை எல்லாமே உடைந்து நொறுங்கிப் போய்விடும். இந்த வீடு கூட குழந்தைகள் இருப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. எல்லாமே உடையப்போகிறது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். பூகம்பம் ஏற்பட்டால் கோவில் ஆகியவை எல்லாமே அழிந்து விடும். நமது இராஜதானியில் இப்படியெல்லாம் ஆகாது. அமெரிக்கா, ரஷ்யா ஆகியவை எல்லாம் இருக்காது. பாரதக் கண்டம் மட்டும் இருக்கப்போகிறது. இதை நீங்கள் அறிவீர்கள். மற்றபடி உலகமே காரிருளில் உள்ளது. பாபாவினுடையது இது எவ்வளவு பெரிய பள்ளிக்கூடம் ஆகும். இதில் டீச்சர்கள் கூட நம்பர் பிரகாரம் உள்ளனர். எல்லோரும் ஒன்று போலவே இருப்பதில்லை. இதில் நீங்கள் பார்ப்பீர்கள், எல்லோரையும் விட பெரிய ஆசிரியரோ சிவபாபா ஆவார். பிறகு இந்த பிரம்மபுத்திரா நதி ஆகும். கூறவும் செய்கிறார்கள், த்வமேவ மாதாஸ்ச பிதா (நீங்களே தாயும், தந்தையும்) எனவே இவர் மாதா ஆனார் அல்லவா! பிறகு சரஸ்வதியின் பெயர் கூட உள்ளது. பிரம்மாவின் ராசிபடி பிரம்மபுத்திரா பெயர் சரியானது கடல் மற்றும் பிரம்மபுத்திரா நதியின் மேளா ஆகிறது என்பதையும் காண்பிக்கிறார்கள். இங்கு பின் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு ஆகும். இதனுடைய நினைவார்த்தம் தான் பக்தி மார்க்கத்தில் பாடப்படுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை மற்றும் பாப்தாதாவின் நினைவு, அன்பு மற்றும் குட்மார்னிங். ஆன்மீகக்

குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) மிகவும் அன்பிற்குரிய தந்தையினுடையவர் ஆவதற்கு முன்பு முழுக்க முழுக்க நஷ்டமோகா ஆக வேண்டும். மன நிலை உறுதியாக அமைந்த பின்னரே சேவையில் ஈடுபட வேண்டும்.

(2) இந்த உலகத்தின் மீது இதய பூர்வமான வைராக்கியம் கொண்டு தூய்மை ஆவதில் தைரியசாலி ஆக வேண்டும். தானம் மிகவும் எச்சரிக்கையுடன் பாத்திரமறிந்து கொடுக்க வேண்டும்.

வரதானம்: பிரச்சனைகளை சாலை ஓரக் காட்சி (சைட் சீன்) என்று புரிந்து கடந்து சென்று முன்னேறக் கூடிய மாஸ்டர் சர்வசக்திவான் ஆகுக.

சதா தனது மாஸ்டர் சர்வசக்திவான் சொரூபத்தின் நினைவில் இருந்தீர்கள் எனில் ஒவ்வொரு பிரச்சனையும் சாலை ஓரக் காட்சியாக அனுபவம் ஆகும். பிரச்சனை என்று புரிந்து கொண்டால் பயந்து விடுவீர்கள். ஆனால் சாலை ஓரக் சாட்சி என்று புரிந்து கொண்டால் எளிதாக கடந்து விடுவீர்கள். ஏனெனில் காட்சிகளைப் பார்க்கின்ற பொழுது குஷி ஏற்படும், பயம் ஏற்படாது. தடைகள் தடைகள் கிடையாது, ஆனால் முன்னேறுவதற்கான சாதனமாகும். தேர்வின் மூலம் வகுப்பு முன்னேறுவீர்கள். ஆகையால் ஒருபொழுதும் எந்த விசயத்திலும் நின்று விடாதீர்கள். சதா மாஸ்டர் சர்வசக்திவான் என்ற நினைவில் பறக்கும் கலையின் அனுபவம் செய்து கொண்டே இருங்கள்.

சுலோகன்: உங்களைப் பார்த்ததும் மற்றவர்களுக்கு யோகா வந்து விடும் அளவிற்கு சகஜயோகி ஆகுங்கள்.